சேலம் மாவட்டம், சங்ககிரி ஒன்றியம்

கத்தேரி ஊராட்சி மன்றம், தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி.எஸ்.தமிழ்ச்செல்வி அவர்கள்



க.எண். 004/2023–24 **நாள் :19.01.2024**

பொருள் : மனைப்பிரிவு – சேலம் மாவட்டம்– சங்ககிரி வட்டம்– கத்தேரி ஊராட்சி

ச.எண். 359/2B –ல் 2 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு

மனைபிரிவுக்கான தொழில் நுட்ப அனுமதி சேலம் மாவட்டம் நகர் ஊரமைப்பு உதவி

இயக்குநர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டது இறுதி ஒப்புதல் வழங்குதல் தொடர்பாக.

பார்வை :

1. திரு. வேலுசாமி த/பெ ஐயம்பெருமாள் 2. K.G மோகன் த/பெ குருசாமி விண்ணப்பம் நாள் 04.01.2024
2. சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் ந.க.எண். SLM/SC4VQX44/18134/2024/TCP
3. சார்பதிவாளர் , சார்பதிவாளர் அலுவலகம் குமாரபாளையம் அவர்களின் பத்திர பதிவு ஆவண எண் 9430 /2023 நாள் 30.12.2023
4. சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண் SLM/SC4VQX44/18134/2024 நாள் 03.01.2024
5. அரசாணை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 04.05.2017
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 14619/88/பிசிசி நாள் 27.04.1988
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 40483/90/எல்எ1 நாள் 07.11.1992
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 7978/2012/எல்எ2 நாள் 19.04.2012
9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 13686/2017/எல்எ1 நாள் 08.09.2017
10. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 2201/2017/SPI–Cell நாள் 28.09.2017
11. அரசாணை எண் 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.02.2020
12. அரசாணை எண் 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 09.12.2020
13. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 50977.2008 / டிபி3 நாள் 05.02.2021
14. அரசாணை எண் 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளாளாச்சித்துறை நாள் 16.07.2022
15. கத்தேரி ஊராட்சி மன்ற தீர்மான எண். 555/ 2023 – 24 நாள் 19.01.2024
16. மனையிட ஒப்புதல் கட்டணம் 2 ஏக்கர் (2 x 1000000) = 2000000 x 3/100 = 60000/
17. மனை பிரிவு வளர்ச்சி கட்டணம் ஊராட்சி கணக்கு எண் – 1 யில் 33 x 1000 = 33,000/– நாள் : 10.01.2024
18. இதர தொடர்புடைய ஆவணங்கள்

******

19.01.2024

பார்வை 4–ல் கண்ட உதவி இயக்குநர் சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அனுமதி கடிதத்தின் படி, சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டத்திற்கு உட்பட்ட கத்தேரி ஊராட்சியில் கத்தேரி கிராம சர்வே எண்.359/2B –ல் 2 ஏக்கர் (8094 ச.மீட்டர்) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களால் சில நிபந்தனைகளின் படி குடியிருப்பு மனை பிரிவிற்கான ம.வ/சேமா எண் SWP/DTCP/SALEM/LAYOUT NO 1 /2024 என்ற எண்ணிடப்பட்டு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேலும், சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம் கத்தேரி ஊராட்சி கிராம சர்வே எண். 359/2B –ல் 2 ஏக்கர் (8094 ச.மீட்டர்) பரப்பளவில் உள்ள நிலமானது சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அலுவலகத்தால் வகைப்படுத்தப்படாத (Unclassified Area) பகுதியில் அமைகிறது. எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச மனைப்பிரிவிற்கான பரப்பு

2 ஏக்கர் (8094 ச.மீட்டர்)

மேற்காணும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமையும் இடத்திற்கு மனையிட தொழில் நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டு சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முழுமையாக பரிசீலனை செய்யப்பட்டு பார்வை 5–ல் காணும் அரசாணையின் படி மேற்கண்ட இடத்திற்கு 3% மார்கெட் வால்யூம், கட்டணம் செலுத்தப்பட வேண்டும். என தெரிவித்ததின் படி மனுதாரர் கீழ்கண்ட கணக்கு தலைப்பில் பின்வருமாறு கட்டணம் செலுத்தியுள்ளார்.

மனையிட ஒப்புதல் கட்டணம் = 2 ஏக்கர் (2 x 1000000) = 20,00,000 x 3/100

= 60000/–

0217– Urban Development -60 Other Urban Development scheme -800 other Receits- AS Receipt under land use conversation – 27 Non Taxation fees-09 Collections. D.P.C-0217-60-800-AS-2790	சலான் மலம் அரசு தரப்பில் செலுத்தப்பட்டது. சலான் தேதி 10.01.2024 Canara Bank Katheri

தற்சமயம், மேற்படி சங்ககிரி வட்டாரம், கத்தேரி ஊராட்சி கிராம சர்வே எண்.359 / 2B –ல் 2 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள இடத்திற்கு கத்தேரி ஊராட்சி மன்றம், கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஊராட்சி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள்

1. பார்வை 4–ல் காணும் உதவி இயக்குநர், சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களின் உத்தேச மனையிட தொழில் நுட்ப ஒப்புதல் கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின் பற்றப்பட வேண்டும்.
2. உத்தேச மனையிட தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் உள்ள அளவு விபரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றியமைத்தல் கூடாது.
3. ஒப்புதல் வழங்கப்படும் மனையிடம் குடியிருப்பு வீடுகள் அமைப்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறது. அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலை ஏதும் ஏற்படுத்த அனுமதியில்லை.
4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து செலுத்த வேண்டி இருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்பட்டால் உரிய தொகையினை மனுதாரர் செலுத்த வேண்டும்.
5. அரசின் கொள்கை அளவிளான மனை ஒப்புதலில், அரசு மாற்றம் ஏதேனும் செய்து உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால், அந்த உத்திரவுகளுக்கு மனுதாரர் கட்டுபட்டவர் ஆவார்.

19.01.2024

6. பத்திரபதிவு மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொருப்பாவார்

7. திறந்த வெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக , மனுதாரரால் விற்பனை செய்யப்பட உள்ள மனை நிலங்களுக்கான உயர் அழுத்த/ சாதாரண மின் அழுத்த மின்சார பாதை (லைன்) அமைத்து மின் வசதி செய்து கொள்ள அனுமதி இல்லை.

8. விற்பனை செய்யப்படாத ஒவ்வொரு மனைபிரிவும், பத்திரபதிவு செய்யும் போது, மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திரபதிவு செய்திட வேண்டும்.

9. மேற்குறிப்பிட்ட நிபந்தனையை மீறினாலோ, மனுதாரரால் அளிக்கப்பட்ட விபரங்கள் சரியானவை அல்ல என்று ஏதேனும் பின்னர் காலங்களில் அறியப்பட்டாலோ அல்லது அரசு விதிமுறைகள் மீறப்பட்டாலோ இம்மனை ஒப்புதல் முன்னறிவிப்பு இன்றி ரத்து செய்ய ஏதுவாகும் என அறிவிக்கப்படுகிறது.

D. Tamilselvi
20/01/2024.

தலைவர்
கத்தேரி ஊராட்சி
சங்ககிரி வட்டம்

கத்தேரி ஊராட்சி மன்றம் சங்ககிரி Tk சேலம் Dt Pin : 638183 சாணாபுரம்-PO

பெறுதல்,

1. திரு. வேலுசாமி த/பெ. ஐயம்பெருமாள்
க எண் 52 மேலூர்,கல்பாவி கிராமம்,
பவானி (TK) ஈரோடு (DT)

2. திரு.K.G.மோகன் த/பெ குருசாமி
க எண் 70/A/126-ல் சொக்காரம்மன் நகர்,
பவானி டவுன் பவானி (TK) , ஈரோடு (DT)

நகல்

1.உதவி இயக்குநர் , சேலம் மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களுக்கு
2.சார்பதிவாளர் குமாரபாளையம் அலுவலகம் நாமக்கல் மாவட்டம்,
3.கத்தேரி ஊராட்சி மன்றம் , சங்ககிரி ஊராட்சி ஒன்றியம்

K.G. மோகன்